# இயல் - 1

# நாட்டுப்புறக் கதைகள் தோற்றமும் வளர்ச்சியும்

# நாட்டுபுறக்கதைகள் தோற்றமும் வளர்ச்சியும்

## நாட்டுப்புறக்கதைகள்

ஏட்டில் எழுதப்படாமல் வாய்மொழி வாயிலாக வழங்கி வரும் நாட்டுப்புற இலக்கியங்களுக்கு மூல ஆசிரியர் யார் என்பது அறியமுடியாத ஒன்றாகும். நாட்டுப்புற இலக்கியங்கள் எப்போது தோன்றின? எங்கே தோன்றின? என்பதும் அறிய முடியாததொன்றாகும். மக்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டு எழுந்த நாட்டுப்புற இலக்கியுங்களின் மூலம் ஒரு நாட்டின் உண்மையான பண்பாட்டை முழுமையாக அறிந்து கொள்ள முடியும்.

மனித இனம் தோன்றிய போதே பண்பாட்டாலும் நாகரீகத்தாலும் மனிதன் உயர்ந்த நிலையை எட்டிவிடவில்லை. கொரில்லா வகையிலான மனிதக் குரங்கினின்றும் மனிதன் படிப்படியாக வளர்ச்சியடைந்தான் என்றும், மரங்களில் வாழ்ந்த உயர்வகைப் பாலூட்டிகளில் சில நிலத்தில் உயிர் வாழத் தொடங்கியதே மனித இனத்தின் தோற்றத்திற்கு முதற் செயலாக இருக்கலாம் என்றும் பல கருத்துக்கள் நிலவுகின்றன.

## மொழியின் தோற்றம்

பறவைகளையும் விலங்குகளையும் கண்டு அவற்றின் ஓசைகளைக் கேட்டுப் ‘போலச் செய்தல்’ முறையில் ஒலிக்கக் கற்றுக்கொண்டு மொழியை உருவாக்கினர். முதலில் ஓசை தோன்றிச் செம்மைப்பட்டு ஒலி வடிவ மொழி தோன்றி, சிறுசிறு சொற்களை, தொடர்களை உருவாக்கிப் பேசத் தொடங்கிய போது பேச்சுமொழி உருவாகியது.

"மனிதனுக்கு முந்தைய காலகட்டத்தில் பாலூட்டிகளின் புலம்பல்களும், சைகைகளும் அவற்றின் கூட்டு உழைப்பின் போது சேர்ந்து ஒருங்கிணைந்து ஒரு புதிய வகையிலான செய்தித்தொடர்பு முறையாக உருவெடுக்கிறது. அச்செய்தித் தொடர்பு முறையின் ஆதார அலகாக வாய்மொழிப் பேச்சு காணப்படுகிறது"[1]. மனிதன் தனது எண்ணங்களையும் கருத்துக்களையும் சைகைகளால் வெளிப்படுத்திய நிலையினின்றும் மாறிப் பேச்சு மொழியின் மூலம் வெளிப்படுத்தினான். ஆதிகால மனிதர்கள் இயற்கையின் பெருவிளைவுகளைக் கண்டு அஞ்சியும் உணவு தேடுகிற போராட்டத்தில் ஈடுபட்டும் வாழ்ந்த போது மொழி தோன்றினாலும், கலைகளைப் பற்றிய உணர்வு, சிந்தனை, வளர்ச்சி ஆகியன உற்பத்தி முறைகளின் வளர்ச்சியை மையமிட்டே வளர்ந்தன.

மனித சமுதாய வரலாற்றில் பொருளாதார நிலையில் ஏற்பட்ட மாறுதல்கள் பிறதுறைகளிலும் நிறைய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. உற்பத்திக் கருவிகளை கண்டுபிடித்தும் ஒன்று சேர்ந்து உழைத்தும் உற்பத்தியை வெகுவாக வளர்த்தன. தேவைக்காகப் பொருளீட்டிய நிலையினின்றும் மாறி பண்ட மாற்றுக்காகப் பொருள்களை உற்பத்தி செய்யும் நிலை வளர்ச்சியடைந்தது. பண்டமாற்றுமுறை மனிதசிந்தனை வளரவும் காரணமாகியது. மனித சிந்தனை வளர்ச்சியும் நாகரிக மேம்பாடும் பொருள் உற்பத்தி வளர்ச்சியை மையமிட்டே வளர்ந்துள்ளன.

ஒவ்வொரு சமூக வளர்ச்சியின் கட்டமும் ஒரு குறிப்பிட்ட உற்பத்தி முறையால் நிர்ணயிக்கப்படுகிறது. பண்ட உற்பத்திமுறை சமூகத்தின் பொருளாதார அடிப்படையாகத் திகழ்வதால் சமூக வரலாறு என்பதை உற்பத்தி வகையின் மாற்றங்களையும் வளர்ச்சியையும் எடுத்துரைக்கும் வரலாறாகக் கொள்ள வேண்டும் என்கிறார் கார்த்தி[2]. அதே சமயத்தில் சமூக வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தைப் பரிசீலிக்கும் போது அந்தக் கட்டத்தில் நிலவும் உற்பத்திமுறை விதிகளையும் அந்த விதிகளுக்கு உட்பட்டு இயங்கும் போக்குகளையும் கூடப்

பரிசீலித்தாக வேண்டும். குறிப்பிட்ட உற்பத்தி முறையால் சமூக வளர்ச்சியின் கட்டம் நிர்ணயிக்கப்பட்டாலும், அவ்வுற்பத்திமுறை பற்றியும் தன் சமூகம் பற்றியும் சமூக உறவுகள் பற்றியும், அதீதச் சக்திகள் பற்றியும் மனிதன் கொண்டுள்ள நம்பிக்கைகளும் சமூக வளர்ச்சியில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

## நம்பிக்கைகளும் கதைத் தோற்றமும்

உழைப்பை மையமாகக் கொண்டும் இயற்கையின் உற்பாதங்களைக் கண்டும் புதிது புதிதாகச் சடங்குகள் தோன்றின. மனித வாழ்வை மாற்றக்கூடிய ஆற்றல், சடங்குகள் மந்திரங்களுக்கு உண்டென்று மக்கள் நம்பத் தொடங்கியதும் ஆவிகளைப் பற்றிய நம்பிக்கைகளும் வளர்ச்சியடைந்தன. உணர்ச்சிப் பெருக்கால் பாவனையாகச் செய்யப்பட்ட நடனங்கள் பின்னர் மாந்திரிக சக்தியுடையனவாகக் கருதப்பட்டன. நோய்களிலிருந்து குணப்படுத்தவும், பிற சக்திகளைப் பயப்படுத்தவும் மந்திரத்தால் இயலுமென்று நம்பத் தொடங்கினர். இந்நம்பிக்கைகள் வெறுமனே வாயளவோடு நின்று விடாமல் அவை பரம்பரை பரம்பரையாகச் சமூகத்தில் நின்று நிலவும் இயல்பாகவே வழிவகைகள் ஏற்பட்டன. அவற்றில் ஒன்றே வாய்மொழியாக வாழ்வில் மந்திரச்செய்யுட்களை அமைத்து அதனைப் பேணிக்காத்தல். அந்நம்பிக்கைகளை மீறுவ தினால் விளையும் தீமைகள் என்னென்ன என்பதை விளக்கும் வாய்மொழிக் கதைகளும் கூடவே எழுந்தன. மந்திரச்செய்யுட்களும் அது தொடர்பான 'நம்பிக்கை' சார்ந்த கதைகளும் மந்திரம் தொடர்பாக மட்டுமல்ல தன் சமூகம் சார்ந்த கோட்பாடுகளைப் பிரதிபலிக்கவும் வாய்மொழிக் கதைகள் உருவாயின. இவை காலப்போக்கில் பல்வேறு வகையான பரிணாம வளர்ச்சியைப் பெற்றன. இவ்வாய்மொழிக் கதைகள் புனை கதைகள் என்றும் பெயர் பெற்றன.

இப்புனை கதைகள் தற்காலப் படைப்புக் கதைகளைப் போன்றவையல்ல. புனை கதைகள் ஒரு காலகட்ட வாழ்க்கையாகும். அதாவது வாழ்க்கையை இயக்கும் நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை[3].

தொடக்ககால மக்களின் நம்பிக்கைகளையும், சமூகம் மனித வாழ்வைக் கட்டுப்படுத்திய நிலையையும் கதைகள் வெளிப்படுத்துகின்றன. ஆதி மனிதனின் சடங்குகளை ஒட்டிய சமய முயற்சிகளுக்கும், வேதமந்திரங்களுக்கும் விளக்கம் அளிக்க எழுந்த கதைகள் வளர்ச்சி பெற்று புராணக்கதைகள் எழுந்தன. சடங்குகளையொட்டி எழுந்த கதைகளை வேதங்களிலும் உபநிடதங்களிலும் காண முடியும். இக்கதைகள் ஒரு காலத்தில் நடந்த உண்மை வரலாறு என்று மக்கள் எண்ணுவதோடு கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் ஒரு காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் எனவும் நம்பினர். கதைத்தலைவர்கள் செய்த செயல்கள் சமயச் சடங்குகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

“இக்கதைகளின் மூலம் இன ஒழுக்கங்களும் சமயச் சம்பிரதாயங்களும் போற்றப்படுவதோடு மக்கள் பழிபாவத்துக் கஞ்சி வாழவும் இவை உதவி புரிந்து வருகின்றன. இக்கதைகள் மனித இனத்துக்கு வழிகாட்டியாக அமைந்தன. சடங்குகளும் விழாக்களும் பயபக்தியோடு செய்யப்படுவதற்கு இவை காரணமாயின. நிக்லஸ்பியர்தேவ் என்ற ருஷ்ய ஞானி கூறியதுபோல “மக்கள் மனதில் இக்கதைகள் வளர்த்த நல்லொழுக்கம் மானிட சமுதாயத்தை நல்வழியில் செலுத்த உதவி வருகிறது எனலாம். நாடோடி இலக்கியம், கவிதை, கலை, சமயம் முதலியவற்றுக்கு இக்கதைகளே அடிப்படையாக அமைகின்றன”[4].

ஆதிகால மக்கள் உழைப்பின் காரணமாகவும், இயற்கையின் விளைவுகளைக் கண்டும் உருவாக்கிய சடங்குகளும், மந்திரங்களும் கதைகளானதும் அவை மக்களால் பெரிதும் நம்பப்பட்டன. நம்பிக்கையின் அடிப்படையில் பயபக்தியோடு ஏற்றுக் கொள்ளப்பட்டன. உடல் உழைப்பினின்றும் நீங்கிச் சடங்குகளை நெறிப்படுத்த வந்த குருமார்கள் இக்கதைகளைத் தெய்வத்தோடு பொருத்திச் சொல்லத் தலைப்பட்டனர். இயற்கை குறித்தும்,

உலகப்படைப்பு குறித்தும் வீரர்களைப் பற்றியும், விலங்குகளைப் பற்றியும் கதைகள் எழுந்தன.

சமுதாயத்தில் வேரூன்றி வளர்ந்து மக்கள் பண்பாட்டின் வரலாற்றுக் கூறுகளையும் மனித இனத்தின் ஆன்மீக உள்ளுணர்வு நிலைகளையும் கோடிட்டுக் காட்டுகின்ற கதைகள் மக்களால் நம்பப்படவில்லையென்றாலும், அம்மக்களின் வாழ்க்கையோடு பிணைந்துள்ள சம்பவங்களோடு நெருங்கிய தொடர்புள்ளவையாக விளங்குகின்றன. கதைகளின் மூலம் தம் ஆழ்மன எண்ணங்களையும், நிறைவேறாத ஆசைகளையும், அவற்றோடு தொடர்புடைய நிகழ்ச்சிகளையும் ஏற்றி மொழிந்தனர். கதைகளை ஆய்வு செய்த சமூகவியல், மானிடவியல், உளவியல், தத்துவவியல் மற்றும் இலக்கியவியல் துறை சார்ந்த அறிஞர்கள் அவரவர்களின் நோக்கில் கதைகளுக்கு விளக்கமளித்துள்ளனர்.

கதைகளைப் பற்றிய ஆய்வாளர்களின் விளக்கங்களை அகநிலை விளக்கம், புறநிலை விளக்கம் என இரு வகையாகக் கொள்ளலாம். இவற்றைப் பொருள்நிலை விளக்கம், அமைப்புநிலை விளக்கம் எனவும் கொள்ளலாம். இவை கதைப்பொருள், கதையின் விளைவு, கதையின் தாக்கம், கதையின் நோக்கு நிலை, கதைக்கரு, கதைப்பாத்திரம், கதை மொழி, கதை அமைப்பு, கதை வடிவம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்தனவாகும். இவற்றின் மூலம் மாறி மாறி வளர்கின்ற பண்பாடு, மரபு வழிப்பட்ட திருமணமுறை, கடந்த கால வாழ்க்கைச் சம்பவம், சமயமரபு சார்ந்த மனிதநேயம், சமுதாயப்போராட்டம், பாலுணர்வுக் குறியீடு, சமூக நடத்தை சார்ந்த ஒழுகலாறு போன்ற சமூக உண்மைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இவை தவிர சமயம், வழிபாடு, சடங்கு, குடும்பவாழ்க்கை, சமூகஉறவுநிலை, குற்றம், தண்டனை, சமூகவிலக்கு, மனித ஆசை, மனிதத் தேவை போன்றவற்றையும் எதிரொலிக்கின்ற வகையில் அகநிலை மற்றும் புறநிலை விளக்கங்களையும் ஒருங்கிணைத்து, கதைகளின் முழுமைத்

தன்மைகளை மனதில் கொண்ட ஆய்வாளர்கள் பல்வேறு நிலையான விளக்கங்களைக் கதைகளுக்கு வழங்கியுள்ளனர்.

சமுதாயப் பாரம்பரியத்தில் குறிப்பாக மக்களை மையமாகக் கொண்டு தோன்றி, காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றமுறையில் மாறி வழங்குகின்ற நாட்டுப்புறக்கதைகள், மக்களின் செயல்நிலைகளையும், அறிவியல் நோக்கங் களையும், மொழியியல் உத்திகளையும், இலக்கிய உணர்வுகளையும், சமுதாயப் பின்னணிகளையும் வளர்ச்சிக் களங்களாகக் கொண்டு மக்களிடையே நிலவுகின்றது என்பது ஆய்வின் உண்மையாகும். இவை கதைகளுக்கு நிகழ்ச்சி அமைப்பையும், மொழிநலத்தையும், கற்பனை வளத்தையும், முருகியல் உணர்வையும் எடுத்துரைக்கின்றன.

## உலகக்கதைகள்

ஆதிகால மக்கள் இயற்கையைப் புரிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்ட போது பேரண்டம் குறித்தும் உலகத்தின் தோற்றம் பற்றியும் பல கதைகளை உருவாக்கினர். இயற்கையின் விளைவுகள் எவ்வாறு நிகழ்கின்றன என்ற மனிதனின் எண்ணங்களும் கற்பனைகளும் உலகத்தின் தோற்றம் பற்றிய சிந்தனைகளுக்கு அடிப்படையாயின. பொருள்களின் தோற்றம் குறித்து மக்கள் கதைகளைச் சொன்ன போது, உலகைப் படைத்தது யார்? என்பது பற்றியும் கதைகள் தோன்றின. “பண்டைய மக்களின் சடங்கு ஆசாரங்களின்றும் இக்கதைகள் எழுகின்றன. மனிதனது இயல்பு பற்றியும் பிரபஞ்சத்தின் மூலாதாரம் பற்றியும், தத்துவ பூர்வமான சிந்தனைகளாக இப்புனைகதைகளைக் கருத முடியாது”.[5]

மக்களின் வாய்வழியாக வழங்கி வந்த இக்கதைகள் அக்காலத்தே தோன்றிய சமயநூல்களிலும், காப்பியங்கள், புராணங்கள் ஆகியவற்றிலும்

சேர்க்கப்பட்டன. கிரேக்கக்கதைகள் பாபிலோனிய சுமேரியக்கதைகள், யூதர்களது கதைகள், ஆரியர்களது வேதபுராணக்கதைகள் ஆகியவை மிகப்பழமையானவை களாகும். இப்படைப்புக் கதைகளின் மூலாதாரச் சிந்தனை பற்றி ஆய்வு செய்த நா. வானமாமலை இவற்றை ஐந்து வகையாகப் பகுத்துள்ளார்".[6]

1. உலகம் சில சக்திகளின் செயலால் ஒரு படைப்பவன் இன்றியே பரிணாமம் அடைந்தது.
2. இவ்வுலகம் ஒரு பெண்ணால் படைக்கப்பட்டது.
3. இவ்வுலகம் ஒரு ஆணால் படைக்கப்பட்டது.
4. இவ்வுலகம் ஒரு பகுதி பெண்ணாலும் ஒரு பகுதி ஆணாலும் படைக்கப்பட்டது.
5. பெண்ணால் படைக்கப்பட்ட உலகம் பின் சக்தி வாய்ந்த தேவர்களால் அழிக்கப்பட்டு ஒழுங்காக மீண்டும் அமைக்கப்பட்டது.

இது போன்று பல்வேறு கருத்துக்கள் உலகப் படைப்புக் குறித்து மக்கள் உள்ளத்தில் தோன்றிக் கதைகளாக வளர்ச்சி அடைந்துள்ளன.

உயர்ந்த மலைகளையும், அடர்ந்த காடுகளையும், ஆழமான குகைகளையும் வாழ்விடங்களாகக் கொண்ட மக்கள், இயற்கையின் மாற்றங்களால் தாக்குண்டபொழுது, அதனால் ஏற்பட்ட இன்பதுன்பங்களை எடுத்துச் சொல்லப் பயன்படுத்திய பேச்சுமொழி, எழுத்துமொழிக்கு முந்திய கதை வடிவமாகும். இது கதை வடிவத்தின் வளர்ச்சி நிலையைக் கோடிட்டுக்காட்டினாலும், ஆய்விற்கு ஏற்ற வகையில் முழுமை பெறவில்லை. கதைகள் கடந்தகாலச் சம்பவங்களாக அமைந்திருப்பதாலும், பேச்சு வழக்கு மொழியில் வழங்கப்படுவதாலும், 'முன்னொரு காலத்தில்', 'வெகு காலத்திற்கு முன்னால்', 'ஒரு காலத்தில்' போன்ற கதைத் தொடக்கங்கள் காணப்படுவதாலும் கதையின் தோற்றம் மிகப் பழமையானது என்பதை உணர முடிகிறது. இவற்றின் துணை கொண்டு கதைகளின் உண்மை

நிலைகளைக் கணிப்பது பொருத்தமுடையதாகாது. இருப்பினும் எழுத்து மொழிக்கு முந்தியது கதை என்பதை ஆய்வாளர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்[7].

இவ்வாறு காலத்தால் கணிக்க முடியாத கதைகள் நிலை பேறடைவதற்கும், பரவுவதற்கும் உறுதுணையாக விளங்கியவர்கள் தமிழகத்தின் பாணர், பறையர், பள்ளர், கள்ளர், கடம்பர், துடியர், சாணார், வேட்டுவர், கவுண்டர் போன்ற குலப் பிரிவுகளைச் சேர்ந்தவராவர்[8]. இம்மக்களின் கதையமைப்பில் வெளியிடங்களிலிருந்து புதிதாகக் குடியேறியவர்களின் வேறுபட்ட கலாச்சார மரபுகள் கலந்ததனால் கதைகளில் புதுமைகள் தோன்றலாயின. காலத்தால் முந்திய பழங்கதைகளில் திராவிடமரபு முறைகளும், இடைப்பட்ட குடியேற்ற காலத்துக் கதைகளில் திராவிடமரபு முறைகளும், இடைப்பட்ட குடியேற்ற காலத்துக் கதைகளில் திராவிட ஆரியமரபு முறைகளும் கலந்து காணப்படுகின்றன. இவை காலத்தால் பிற்பட்டவையாகும். எனவே காலந்தோறும் ஏற்படுகின்ற புதிய தாக்கங்களால் கதைகளில் ஏற்படுகின்ற மாறுதல்கள், கதைகளின் தோற்ற காலத்தைக் கணிப்பதில் சிக்கல்களை எற்படுத்துகின்றன.

பழைய மரபுகளும் புதியமரபுகளும் விரவி அமைந்துள்ள கதைகளைத் தோற்றுவிக்கின்ற காரணிகளை முதல்நிலைக் காரணிகள், இரண்டாம் நிலைக் காரணிகள் என இரு நிலைப்படுத்தலாம். முதல்நிலைக் காரணிகளாகச் சமுதாய நிறுவனங்கள், நடைமுறை வாழ்க்கை அனுபவங்கள், குலக் குழுமங்கள், இயற்கை மாற்றங்கள், தொழிற்களங்கள், உணவுப்பழக்கங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இரண்டாம்நிலைக் காரணிகளாக அச்சஉணர்வுகள், அற்புதச்செயல்கள், பாலுணர்வுகள், மனிதத்தேவைகள், போலச் செய்தல், நீதிவாசகங்கள் ஆகியவை முன் நிறுத்தப் படுகின்றன. இவ்விரு காரணிகளுக்கும் மூலகாரணமாகச் சமூக அமைப்பு, இயற்கை அமைப்பு மற்றும் மனித மெய்ப்பாடு போன்றவை காரணமாகின்றன. இக்காரணிகள் காரியத்தொடர்புகளை உருவாக்குவதோடு அவற்றிற்கான சமுதாயச்

சூழல், இயற்கைச் சூழல், பொருளாதாரச் சூழல், தனிமனிதச் சூழல், பண்பாட்டுச் சூழல் ஆகியவற்றையும் தோற்றுவிக்கின்றன.

## சமூக அமைப்பு

இணைந்து வாழ்கின்ற மக்களின் ஒட்டு மொத்தமான உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற கதைகளின் தோற்றத்திற்குச் சமுதாய நிறுவனங்களான குடும்பம், சமயம், அரசியல், பொருளாதாரம், கல்வி ஆகியன முக்கியக் காரணங்களாக விளங்குகின்றன.[9] குடும்பச் சம்பவங்களும், சமய வழிப்பட்ட கொள்கைகளும், பல்வேறு அரசுகளின் ஆட்சி முறைகளும், கல்வி வழிப்பட்ட பயணங்கள் மற்றும் போதனைகளும், மக்களை இயக்குகின்ற பொருளாதார இன்றியமையாத் தேவைகளும் கதைகள் தோன்றுவதற்குக் காரணங்களாக விளங்குகின்றன.

## குடும்ப அமைப்பு

திருமணம், பண்பாட்டுச்சடங்குகள், சாவு போன்ற மனித வாழ்க்கைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட குடும்பத்தை, பிறந்த குடும்பம், புகுந்த குடும்பம், கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் எனப் பலவகைப்படுத்தலாம்.[10] திருமணம், குடும்பங்களைத் தோற்றுவிப்பதால் சமுதாய வளர்ச்சியில் குடும்பம் முக்கியப் பங்கு பெறுகிறது. கல்வி தருதல், அறிவூட்டுதல், தொழில் புரிதல், பண்பாடு காத்தல், முதியோரைப் பேணல் ஆகியவை குடும்பத்தின் முக்கியக் கடமைகளாக விளங்குகின்றன. குடும்பச் சம்பவங்களும், குடும்பக் கடமைகளும், குடும்ப உறவுகளும், கதைகளைத் தோற்றுவிப்பதில் பெரும்பங்கு பெறுகின்றன. குடும்பம், சமூகத்தை நிர்ணயிக்கின்ற காரணிகளில் முதன்மையாக விளங்குவதால் அரசியல், சமயம், கல்வி, பொருளாதாரம் ஆகிய நிறுவனங்கள் குடும்பத்தை மையமாகக் கொண்டு விளங்குகின்றன எனலாம். குடும்ப வாழ்க்கை பற்றிய

நிகழ்ச்சிகளைக் கதைகளாக வெளிப்படுத்திய மனிதன், அந்நிகழ்ச்சிகளின் உரைகல்லாகச் சமயம், அரசியல், கல்வி, பொருளாதாரம் ஆகிய நிறுவனங்களை அமைத்துக் கொண்டான்.

## சமய அமைப்பு

கடவுளரின் தோற்றம், செயல்விளக்கம், அமைப்புத் தத்துவம், வழிபாடு, குறியீடு போன்றவற்றின் விளக்கப் போதனைகள் அடங்கிய கருத்துக் கொள்கைகள் சமயமாகும். இச்சமய வரலாற்றில் மானிடர்களுக்கு நன்மை செய்யக்கூடிய அனைத்து வகைத் தெய்வங்களும் அடங்கும். அத்தெய்வங்களுக்கு மக்கள் எடுக்கின்ற விழாக்களும் மேற்கொள்ளப்படுகின்ற சடங்கு முறைகளும், வழிபாடுகளும், அதன் பயனாக ஏற்படுகின்ற தெய்வங்களின் செயற்பாடுகளும் கதைகளின் தோற்றத்திற்கு முக்கியக் காரணங்களாகின்றன.

"பண்டைய மக்களின் சடங்காச்சாரங்களையும், ஆண்டுதோறும் நடைபெறுகின்ற விழாக்களையும் விளக்குவதற்குக் கதைகள் தோன்றின"[11]. சடங்குகள், பலி, படையல், விழா, வழிபாடு போன்ற சமயச் செயல்களை ஒருவர் மற்றவருக்கு எடுத்துரைக்கின்ற தொடருரை, கதை வடிவத்திற்கு அடிப்படையாக அமைந்திருக்கலாம். இவ்வாறு வாய்மொழியாகப் பரவி இறுதியில் கதையாக வடிவம் பெறுவதற்குச் சமயமும் முக்கியக் காரணமாக விளங்குகிறது. பரமசிவன் பதில் கூறும் கதை மந்திரப்போணி, மாதுளம்கன்னி, குளத்துதெய்வம் போன்றவை இதில் அடங்கும்.

மனிதன் வரையறுக்கப்பட்ட சக்திகளுக்கு உட்பட்டவன். எனவே தான் சமூகத்தோடு இணைந்து வாழ விரும்புகிறான். சமூகத்தின் உதவியில்லாமல், மனிதன் தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது என்பது இயலாது. எனவே, சமூகத்தோடு ஒட்டிய சமூக விலங்காக, சட்டதிட்டங்களால் வரையறை

செய்யப்பட்ட ஓர் அமைப்பின் கீழ் வாழ முற்படுகிறான். இவ்வமைப்பே மனிதனைப் பாதுகாத்து வாழ வழிகாட்டுகின்ற அரசியல் நிறுவனமாகும்.

## பொருளாதார அமைப்பு

மனித வாழ்க்கைக்குப் பொருளாதாரம் இன்றியமையாததாகும். மனித வாழ்க்கையில் ஏற்படுகின்ற பொருளாதாரத் தேவையும் கதைகள் தோன்றுவதற்குக் காரணமாக விளங்கியுள்ளது. பொருளாதாரத்தை மையமாகக் கொண்ட சமூகத்தேவைகள், சமூகக்குறைகள், சமூகக் கொடுமைகள் போன்றவை கதையாக்கம் பெற்றுள்ளன. மக்களின் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிக்கின்ற பொருளாதாரம், கதையின் தோற்றத்திற்கு மூலகாரணமாக விளங்கியுள்ளது. "உடன்பிறந்த சகோதரர்களில் அண்ணன் பொருள் உள்ளவனாகவும், தம்பி பொருளற்றவனாகவும் வாழ்கின்றனர்". இவர்களுக்கிடையே நிலவிய பொருளாதார வேறுபாடு, சம்பவங்களை உருவாக்கும் தன்மையதாய் விளங்குகிறது. இவ்வகைப் பொருளாதாரச் சம்பவங்கள் காலப் பின்னணியில் கதை வடிவங்களாயின. இக்கதை வடிவங்கள் பொருள்பெற்ற விதம், பொருள் அளிக்கக் காரணம், பணக்காரனாக மாறிய நிலை, பொருள் தேடியமுறை, ஈட்டிய பொருளைப் பயன்படுத்திய முறை போன்ற சமூக மற்றும் தனிமனிதச் செயல்களை மையப்படுத்தின.

## கல்வி தொடர்பானவை

சமூக வாழ்வில் மக்களுக்குக் கல்வி இன்றியமையாததாகும். மக்களை நெறிப்படுத்துவதும், வழிப்படுத்துவதும், வையத்தில் வாழ்வாங்கு வாழ வைப்பதும் கல்வியாகும். அறிவுரை, அறவுரை, போதனை, நீதிநெறி மார்க்கம் போன்றன கல்வியின்பாற்பட்டவையாகும். அடிப்படை அறிவு, பட்டறிவு, நூலறிவு என்பன இவற்றின் பயன்களாகும். விடுகதை, பழமொழி, முதுசொல், சொலவடை,

பாட்டு போன்ற சொல்வழிப்பட்ட நாட்டுப்புறக் கல்வியைக் கருவாகவும், கருத்தாகவும் கொண்டு கதைகள் தோன்றியுள்ளன. இதை உறுதிப்படுத்தும் வகையில், 'கணக்கனைப் பகைத்தவன் காணியை இழப்பான்', 'நன்மை செய்தவனையும் மக்கள் மறக்கமாட்டார்கள்', 'தீமை செய்தவனையும் மக்கள் மறக்கமாட்டார்கள்', 'வல்லவனுக்கு வல்லவன் வையத்தில் இருப்பான்', 'எல்லாம் விதிப்படிதான் நடக்கும், விதியை மாற்றுவது யார்?', 'நன்மை செய்தவன் நன்மை அடைவான், தீமை செய்தவன் தீமை அடைவான்' போன்ற மக்கள் நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட வழக்குகள் கதைகளாகத் தோற்றம் பெற்றுள்ளன. வாய்மொழி வழக்குகளைப் பின்னணிகளாகக் கொண்ட நாட்டுப்புறக் கல்வியால் கதைகள் தோற்றுவிக்கப்படுவதால் கல்வியும் கதையாக்கக் காரணிகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

## நடைமுறை அனுபவங்கள்

நடைமுறை வாழ்க்கை அனுபவங்கள் என்பன மக்களின் சிந்தனை, சொல், செயல், கருவி போன்றவை அடங்கிய மனித ஆளுமையாகும். இந்த ஆளுமை இயற்கையாக உருவாவதில்லை; மக்களால் எண்ணித் துணிந்து ஏற்றுக் கொள்ளப்படுவதாக உள்ளது. மக்களின் வழிவகை அறிவு மற்றும் தெரிநிலை அறிவு சார்ந்த நடைமுறை வாழ்க்கை அனுபவங்களின் படிவங்களாகச் சடங்குகள், விழாக்கள், பழக்கவழக்கங்கள், வழிபாடுகள், மதிப்புணர்வுகள், ஒழுக்கமுறைகள், விலக்குகள் போன்றவற்றைக் கொள்ளலாம். அவை, கால இடப் பின்னணிகளோடு எடுத்துரைக்கப்படுகையில் கதை வடிவம் பெறுகின்றன.

நடைமுறை வாழ்க்கை அனுபவங்களோடு நெருங்கிய தொடர்புடைய வாழ்க்கை அனுபவங்களாகக் கீழ்க்கண்டவற்றைக் கதைகள் சித்திரிக்கின்றன. மனைவியைப் பிரிந்து வாழ்தல், தன்னிச்சையான திருமண வாழ்க்கை, சிற்றினம் சேர்ந்த வாழ்க்கை, மாமியாரை ஏமாற்றுகின்ற மருமகள்கள் போன்ற வாழ்க்கை

அனுபவத்தின் விளைவுகளும், பொறாமை, பேராசை, அறியாமை, மதியாமை, அநியாயம், கொடுமை, குலப் பாகுபாடு, பிறப்பு மற்றும் இறப்பு, பாலுணர்வு, மனிதத்தேவை, நீதி போன்றவற்றைப் பற்றிய விளக்கங்களும், கதைகள் தோன்றுவதற்கு முக்கிய மூலங்களாக விளங்குகின்றன. இயல்நிலைச் சம்பவங்களும், இயற்கையின் மாறுதல்களும், அவற்றின் விளைவுகளும் வளர்ப்பவையாகவும் விளங்குவதால் இவற்றைப் பற்றிய மக்களின் சிந்தனை வெளிப்பாடுகள் கதை வடிவம் பெறுகின்றன.

## குழுக்கள்

சமுதாய அமைப்பில் காணப்படுகின்ற குலக் குழுமங்கள் அல்லது குலப்பிரிவுகள் கடவுள், தொழில், உணவு, மொழி, இடம், அரசியல், பொருளாதாரம், வாழ்க்கைத்தரம், சமயம், செயல் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய மக்கட் பிரிவுகளாகும். இவை மொழிக்கேற்றவாறும், இடத்திற் கேற்றவாறும் பண்பு, பழக்கவழக்கம், வழிபடு தெய்வம் போன்றவற்றால் வேறுபட்டு விளங்கின. காலப்போக்கில் இடையர், ஆயர், உமணர், உழவர், கம்மியர், குயவர், குரவர், குறும்பர், கொல்லர், தச்சர், பரதவர், பறையர், பாணர், புலையர், வடுகர், வண்ணார், மறவர், வணிகர், வேடர் போன்ற மக்கள் குழுமங்களைச் சுட்டி இக் குலக் குழுமங்கள் அமைந்தன. இம்மக்கள் குழுமங்களின் தோற்றம் தொழில், வாழ்க்கைநிலை, வாழ்விடம், கடவுட் கொள்கை போன்றவற்றை எடுத்துரைக்கின்ற வகையில் கதைகள் உருவாக்கப்பட்டன. இக்கதைகள் சில குழுமங்களை உயர்த்தியும், சில குழுமங்களைத் தாழ்த்தியும் உரைத்தன. இவ்வேற்றத்தாழ்வு, மக்களை ஒன்றுபடவிடாமல் தடை செய்தது. இதற்குக் கடவுள், மீமானிடர் போன்றோரைக் காரணம் காட்டிக் கதைகள் தோன்றலாயின. எனவே குலக் குழுமங்களையும் கதைகளின் தோற்றக் காரணிகளாகக் கொள்ளலாம்.

குலக் குழுமங்களை மையமாகக் கொண்டு தோன்றிய கதைகளில் அமைந்துள்ள சில கதைப் பகுதிகளை இதற்குச் சான்றுகளாகக் கூறலாம். 'ஒரு ஊரில் ஒரு ஆசாரி இருந்தார். கலப்பை, மண்வெட்டி, கொத்து, அகப்பை, துடுப்பு போன்ற கருவிகளைச் செய்வது அவரது வழக்கம்'. 'ஒரு ஊரில் ஒரு கோனார் இருந்தார். அவர் அநேக ஆடுகள் வைத்திருந்தார். ஆடுகளை மேய்ப்பது அவரது தொழில்'.

குலக் குழுமங்களின் வகைகளும், குலத்தொழில்களும், சமூக மதிப்புகளும், வாழ்க்கை முறைகளும், பழக்கவழக்கங்களும் கதைகளைத் தோற்று வித்துள்ளன என்பதை மேற்கூறப்பட்டுள்ள கதைப்பகுதிகள் விளக்குகின்றன. மக்கள் குழுமங்களின் பிரிவுகளான குலக்குழுமங்கள் முக்கியக் கதைக் காரணிகளாகின்றன.

## இயற்கை மாற்றங்கள்

மனித வாழ்க்கையில் நிகழ்கின்ற இயல்நிலைச் சம்பவங்களைப் போன்று, இயற்கை நிலையில் ஏற்படுகின்ற மாற்றங்களும், விளைவுகளும் கதைகள் தோன்றுவதற்குக் காரணங்களாகின்றன. இயற்கைச் சூழல்கள், இயற்கையின் விளைவுகள், பூகோள அமைப்புகள், உயிரினங்களின் படைப்புநிலை மற்றும் இயற்கை இக ந்த நிகழ்வு போன்றவை மக்களை அச்சுறுத்துவனவாகும். அவ்வச்ச உணர்வைப் போக்கும்பொருட்டு, இயற்கை மாற்றங்கள் பற்றிக் கற்பனையாக விரித்துரைக்கின்ற நிலை உருவாகி அவ்விரிவுரை காலப்போக்கில் கதையாக்கம் பெற்றிருக்கிறது. இவ்வகையில், ஆகாயம், பூமி போன்றவை பற்றிய கற்பனை விளக்கம்; அமாவாசை, பௌர்ணமி மாற்றம் பற்றிய கற்பனை விளக்கம்; கடவுளரின் தோற்றநிலை; காற்று மழை போன்ற இயற்கைச் சக்திகளின் முக்கியத்துவம் போன்றவை பற்றிய விளக்கங்கள் கதை வடிவமாக்கப்பட்டு மக்களின் உணர்வுகளுக்கேற்ப நியாயப்படுத்தப்பட்டுள்ளன. இயல்பாக அமைந்திருக்கின்ற

அல்லது நடைபெறுகின்ற இயற்கைத் தன்மைகள் மக்களால் பலவாறு பேசப்பட்டு குறிப்பிட்ட காலச்சூழலில் கதைகளாக வழங்கியுள்ளன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## தொழில் அடிப்படையில்

மக்கள் வாழ்க்கைக்குப் பின்புலமாக விளங்குவது தொழிலாகும். தொழிற்களங்களில் மக்கள் மேற்கொள்ளும் தொழில், அதன் வளர்நிலை, அதன் போக்கு மற்றும் தொழிலை ஒட்டிய சம்பவம் போன்றவை கதைகள் தோன்றுவதற்குரிய நிலைக்களன்களாக விளங்குகின்றன. மக்களின் பாரம்பரிய வாழ்க்கை நிலைகளை நெறிப்படுத்துகின்ற வேளாண்மைத் தொழில், வணிகத் தொழில், கால்நடை வளர்த்தல், முடிஅலங்காரத் தொழில், வணிகத்தொழில், பறையறைதல் தொழில், மண்பாண்டத்தொழில், தச்சுத்தொழில், நாடாளும் பொறுப்பு, சலவைத்தொழில் போன்ற தொழில்களும் அவற்றை மேற்கொள்கின்ற முறைகளும் கதைகளாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. "காட்டில் வேட்டையாடிய ஆதிமனிதன் தன் அனுபவங்களை மற்றவர்களுக்குச் சொல்வதிலேயே கதையின் தொடக்கத்தைக் காணலாம்[12] என்ற கருத்து, கதையின் தோற்றமும், தொடக்கமும் தொழிற்களங்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன. தொழிலின் சாதனைகளும் வேதனைகளும் கதையின் தோற்றத்திற்குப் பெரிதும் உதவியுள்ளன எனலாம்.

வேளாண்மைத் தொழிலும், வேட்டைத்தொழிலும், கதைகளில் முக்கியத்துவம் பெற்றுள்ளதைப் போல மண்பாண்டத்தொழில், தச்சுத்தொழில், நாடாளுதல், வணிகத்தொழில், கால்நடை பராமரிப்பு போன்ற வாழ்க்கைத் தொழில்களும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இத்தொழில் நிலைகளில் ஏற்படுகின்ற விருப்பு வெறுப்புணர்வுகள் கதைகளைத் தோற்றுவித்துள்ளன என்பதோடு தொழில் வழிச் சம்பவங்களும் கதைகளாக்கப்பட்டுள்ளன. எனவே மக்கள் புரிகின்ற தொழில்களைக் கதைகளின் தோன்றுகளமாகக் கொள்ளலாம்.

## உணவுப்பழக்கங்கள்

மனித உறவுகளை அடிப்படையாகக் கொண்ட சமுதாய அமைப்பில், மக்களின் இடப்பெயர்ச்சி தவிர்க்க முடியாத ஒன்றாகும். இடப்பெயர்ச்சிக் காலங்களில் ஏற்படுகின்ற உணவு மாற்றம், அம்மாற்றத்தால் ஏற்படுகின்ற இன்ப துன்ப அனுபவங்கள் கதைகள் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணங்களாக விளங்குகின்றன. உண்பதற்குத் தகுதியானவை எனச் சில விலங்குகளையும், தகுதியற்றவை எனச் சில விலங்குகளையும் மக்கள் வரையறை செய்துள்ளனர். உண்பதற்கு என வரையறை செய்யப்பட்ட விலங்கினங்களின் இறைச்சியை மனிதன் உண்கின்றபொழுத அது சாதாரணச் செயலாகக் கருதப்படுகிறது. உண்பதற்குத் தகுதியற்ற அல்லது விலக்குச் செய்யப்பட்ட விலங்கினங்களின் இறைச்சியை மனிதன் உண்ணத் தொடங்குகையில் அது வழக்கத்திற்கு மாறானதாகக் கருதப்படுகிறது. எனவே, வழக்கமுறைகளுக்கு மாறுபட்ட அல்லது முரண்பட்ட இறைச்சி மற்றும் தானிய உணவுப்பழக்கத்தால் ஏற்படுகின்ற விளைவுகள் பற்றிய அனுபவங்கள் கதைகளாக வடிவம் பெற்றுள்ளன என்பதற்கு, மாட்டிறைச்சியை உணவாகக் கொண்டதால் நாயக்கர், சக்கிலியர் ஆகிய குலப் பிரிவுகள் தோன்றின; கேழ்வரகுக் கூழை உணவாகக் கொண்டதால் நகைப்பிற்குரியவனானான்; கேழ்வரகுப் புட்டுச் சாப்பிட்டதனால் யானையை வெல்லும் அளவிற்குப் பலம் பொருந்தி விளங்கினான்; மூன்று மூடை நெல்லைக் குத்திக் கஞ்சி வெள்ளம் போட்டுக் கணவனுக்குக் கொடுக்கும் மாயக்காள் அறியாமை உடையவளாகத் திகழ்ந்தாள் போன்ற கதைப் பகுதிகள் எடுத்துக் காட்டுக்களாகும். எனவே, மக்களின் உணவு வகைகளும் கதைகள் தோன்றுவதற்குக் காரணங்களாக விளங்கின என்பது உறுதிப்படுகிறது.

## கதைகளின் பண்புகள்

பண்பு, தன்மை, இயல்பு, குணம், நிலை, விதி, கொள்கை என்பன நாட்டுப்புறக் கதைகளின் சிறப்பு அல்லது தனித்தன்மைகள் எனலாம். இவற்றைக் கதைகளின் பண்புகள் என்னும் ஓரினத் தன்மைக்குள் அடக்கலாம். இப்பண்புகள், கதைகளில் இயல்பாக அமைந்து, பிற எழுத்துவடிவக் கதைகளிலிருந்து நாட்டுப்புறக்கதைகளை வேறுபடுத்துவதோடு அவற்றை அடையாளம் கண்டு கொள்ளவும் பயன்படுகின்றன. இவ்வகையில் நாட்டுப்புறக் கதைகளின் பண்புகளை வாய்மொழியாகப் பரவுதல், மரபுவழிப்பட்ட போக்கு, பல்வேறு வடிவங்களாகத் திரிதல், ஆசிரியர் அல்லது ஆக்கியோர் இன்மை என்ற பண்புகளுடன் அடக்கலாம்[13] கதைப்பாத்திரங்களின் பெயர்கள் சுட்டப்பெறாமை, இடத்தையும் காலத்தையும் முதன்மைப்படுத்திச் சிக்கலை மையமாகக் கொண்டு தொடங்குதல், எடுத்துரைத்தல், மனிதப்பண்பாக்கம், உயிர்க்குறிப்பேற்றம் ஆகிய உத்திகளுடைமை, இன்ப முடிவு அல்லது நோக்கம் நிறைவேறிய முடிவு, நினைவில் நிற்கும் மரபுத் தொடர்புகளினால் ஆக்கம்பெறுதல், வருணனை இன்றி அமைந்து, கருத்தை குறிப்பாகச் சுட்டிக்காட்டுதல், வீர உணர்வு கலந்த செயல்நிலை, வசைமொழி கலந்த வார்த்தை அடுக்குகள், மிகையான கற்பனை அமைப்பு, சிறுகதையாகவும் நெடுங்கதையாகவும் அமைதல், கிளைக்கதைப் போக்கின்மை, விசித்திரமான அல்லது அதிசயம் கலந்த புதுமைகள், நாட்டில் தொடங்கி, காட்டில் வளர்கின்ற போக்கு, இலக்கியம், நாடகம் மற்றும் பிறமொழித் தொடர்களைக் கொண்டிருத்தல், உயர்திணை மற்றும் அஃறிணைப் பொருள்களைக் கதைப்பாத்திரங்களாகக் கொள்ளல் போன்றவை நாட்டுப்புறக் கதைகளின் பண்புகளாகும்.

## நாட்டுப்புறக்கதைகள் பரவும் முறைகள்

செவிவழிச் செய்தியாகப் பரவுகின்ற பேச்சுமொழி சார்ந்த நாட்டுப்புறக்கதைகள் சுற்றுப்புறச்சூழல், கல்விநிலை, பொருளாதாரநிலை, மக்களின்

மனநிலை ஆகியவற்றிற்கேற்ப இயற்கை இகந்த போக்கில் வேடிக்கையாகவும், விழிப்புணர்வுக்காகவும் முன்னிரவுக் காலங்களிலும், ஓய்வுக் காலங்களிலும், வழிப்பயணங்களிலும், விழாக்காலங்களிலும், வேலைக்காலங்களிலும், சொல்லப் படுவனவாகும். இக்கதைகள், உய்த்துணர்தல், படித்துணர்தல், கேட்டுணர்தல் ஆகியவற்றில் கேட்டுணர்தலைச் சிறப்புத் தன்மையாகக் கொண்டு எளிதில் விளங்கக்கூடியதாகவும், மனதில் நிலைபெறக்கூடியதாகவும், எளிதில் மனனம் ஆகக் கூடியதாகவும் விளங்குவதால் ஒருவரால் சொல்லப்படுகின்ற கதை, குன்றாத வளர்ச்சிப் போக்கினையும், குறையாத செல்வாக்கையும் பெற்றுக் காலங்காலமாக நிலைத்துப் பரவுகின்றது. இதற்கு மொழிப்பற்றையும், இனப்பற்றையும், சாதிப்பற்றையும், நாட்டுப்பற்றையும், முருகியல் போக்கையும் காரணங்களாகக் கூறலாம்[14].

சமயப்பிரிவுகளும், குலப்பிரிவுகளும் மக்களின் பேச்சுமொழி வழக்கும், ஆக்கியோன் இன்மையும் கதைகள் பரவுவதில் பெரும்பங்கு வகிக்கின்றன. சமயம் மற்றும் குலமுறைப் பாரம்பரியத்தில் தோன்றிய கதைகள் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவாறு வேறுபட்ட மற்றும் மாறுபட்ட சமயம் மற்றும் குலமுறைப் பாரம்பரியத்தினரால் ஏற்றும் இகழ்ந்தும் புகழ்ந்தும் விமர்சிக்கப்படுகின்ற பொழுது எளிதாகப் பரவுகின்றன. கதைகளை ஆக்கியோர், கதைகளோடு இணைத்துச் சொல்லப்படாமையும், கதைப்பாத்திரங்களின் பெயர்கள் குறிப்பிடப் படாமையும் கதைகள் பரவுவதை எளிமைப்படுத்தியுள்ளன எனலாம். ஏனெனில் கதைகளை ஆக்கியோர் இன்னார் என அறிய முடியாததாலும், அவர்களின் பொருளாதாரநிலை, சமயம், குலம் போன்றவற்றைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியாததாலும் கதைகளுக்கு எதிர்ப்போ அல்லது மறுப்போ ஏற்படுவதில்லை. ஒரு குலப் பிரிவினரை மற்றொரு குலப்பிரிவினர் எதிர்ப்பதற்கும், ஒரு சமயப் பிரிவினரை மற்றொரு சமயப் பிரிவினர் பழிப்பதற்கும் கதைகள் இடம்தரவில்லை.

இத்தன்மை, கதைகளின் பரவலையும், நிலைப்பேற்றையும் உறுதிப்படுத்துவதாக விளங்குகிறது.

ஓர் இடத்தில் ஒரு மனிதனால் சொல்லப்பட்ட கதை, மற்றோர் இடத்தில் வேறொரு மனிதனால் சொல்லப்படுவதற்குப் பல காரணங்களைக் கூறலாம். அவற்றுள் சமூக உறவுகளால் ஏற்படுகின்ற பரிமாற்றங்கள், சமயம், வாணிகம், கல்வி ஆகியவற்றினை மையமாகக் கொண்ட பயணங்கள், வரலாறு, புவியியல், அமைப்பு, ஆராய்ச்சி போன்றவற்றினால் ஏற்படுகின்ற திருப்பங்கள், மொழி, பண்பாடு, குடியேற்றம், அரசியல் ஆகியவற்றை மையமாகக் கொண்ட தொடர்புகள் போன்றவற்றை முக்கியமானவையாகக் கொள்ளலாம். இவை, கதைகள் பரவிய முறைகளையும், அவற்றிற்கான காரணங்களையும் கண்டறிவதற்கு உதவுகின்ற கருவிகளாக விளங்குகின்றன. இவற்றின்படி ஒரு கதை, காலப்போக்கில் பலவிதமான மாற்றங்களைப் பெற்றும் வழங்கலாம்.

கதையானது மொழி, பண்பாடு, இடம் மற்றும் சமூகம் ஆகியவற்றின் எல்லைகளைத் தாண்டிப் பரவுகின்றபொழுது பல்வேறு மாற்றங்களை அடைக்கின்றன. அவற்றுள், கதையின் உருவம் திரிந்து பரவுதல், கதையோடு கதை சேர்ந்து விரிவடைந்து பரவுதல், ஒரு நிகழ்ச்சிக்குப் பதிலாக மற்றொரு நிகழ்ச்சி புகுந்து பரவுதல், கதைக்களங்கள் மாறிப் பரவுதல், கதைப்பின்னணிகள் மாறுதல், கதைப் பாத்திரங்கள் மாறிப்பரவுதல், கதையாளர்களின் உணர்வுகளுக்கு ஏற்றவாறு பரவுதல் போன்ற மாற்றங்கள் முதன்மையானவையாகும்.[15] இம்மாற்றங்களால் மக்கள் சில கதைப்பகுதிகளை மறப்பதும், மறந்துவிட்ட கதைப்பகுதிகளை ஈடான கதைப்பகுதி மற்றும் சொற்களால் நிரப்பியும், வழங்கி, கதைகள் பரவுவதற்கு முன்மாதிரியாக விளங்குகின்றன . இவ்வாறு ஓர் இடத்தில் தோன்றுகின்ற கதைகள், மறைந்தும், திரிந்தும், மருவியும், குறுகியும் வழங்கிப் பரவுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## கதைகளின் நோக்கம்

மக்களிடமிருந்து தோன்றிய கதைகள், மக்களுக்குத் தேவையான மற்றும் மக்களால் விரும்பப்படுகின்ற உண்மைகளை, உணர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்நோக்கங்கள், இறைத்தன்மைகளை மக்களின் மனதில் நிலைநாட்டுவனவாகவும், சமூகம் மற்றும் பொருளாதார முக்கியத்துவங்களை விளக்குவனவாகவும், வேளாண்மை, கால்நடை மற்றும் தொழில் வகைகளின் மேம்பாட்டு உண்மைகளைப் புலப்படுத்துவனவாகவும், மனித இனத்தின் உயர்வுகளை வெளிப்படுத்துவனவாகவும் காணப்படுகின்றன. இந்நோக்கங்கள் கதைகளின் சம்பவங்களைப் பற்றி அமையாது, அவை புலப்படுத்துகின்ற உண்மைகளைப் பற்றி அமைந்துள்ளன.

கதைகள், மனித வாழ்வையும், மனிதனோடு தொடர்புடைய மற்றவற்றையும் மையமாகக் கொண்டு இயங்குவதால் அவற்றின் கருத்து வெளிப்பாட்டு நோக்கங்கள் அகநிலை மற்றும் புறநிலை சார்ந்தவையாகத் திகழ்கின்றன. அவை இயற்கையாகவும் மற்றும் செயற்கையாகவும் அமைந்துள்ள கதைகளின் நோக்கங்களை, மக்களின் அகப்புறக் கொள்கைகளுக்கிணங்க சமூக அடிப்படை நோக்கம், கொள்கை விளக்க நோக்கம், குறைதீர்க்கும் நோக்கம், பண்பாட்டு நோக்கம், பொழுதுபோக்கு நோக்கம், இயற்கை இகந்த ஆற்றல்களை விளக்கும் நோக்கம் என வகைப்படுத்தி வரிசைப்படுத்தலாம். இவற்றைக் கதைகளின் அகநோக்கம், புறநோக்கம் என இரு பிரிவிற்குள் அடக்கலாம். இவற்றின் மூலம், மனிதச்சிந்தனைகள், மனிதஉணர்வுகள், மனித மனோபாவங்கள், இறைநெறிக்கொள்கைகள், மீமானிடரின் அற்புதச் செயல்கள் மனித இலட்சியங்கள், மக்கள் மரபுகள், சமூகவிலக்குகள், காதல் மற்றும் பக்தி, புத்திசாலித்தனம் மற்றும் முட்டாள்தனம், வெகுமதிகள் மற்றும் தண்டனைகள் போன்ற நியாயமான நோக்கங்கள் கதைகளின் மூலம் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன.

இவற்றைத் தவிர மனித உறவு முறைகள், அரசியல் நிலைகள், மந்திர—தந்திர—யந்திர உத்திகள், பாலுறவுச் சிக்கல்கள் மற்றும் தடைகள், தனிமனித வெளிப்பாடுகள், விலங்கினங்களின் வாழ்க்கை நிலைகள், வழக்கு மொழிகள் போன்றவற்றைப் பற்றி இனங்காட்டி எடுத்து மொழிவதை உள்நோக்கங்களாகக் கதைகள் கொண்டிருக்கின்றன.

நாட்டுப்புறக்கதைகள் வெறுமனே பொழுதுபோக்கிற்காகவும், வேடிக்கைக்காகவும் சொல்லப்படுவதில்லை. பொழுதுபோக்கிற்காகவும், வேடிக்கைக்காகவும் கதைகள் சொல்லப்பட்டாலும் அவற்றின் உள்நோக்கம் ஏதாவதொரு படிப்பினையைப் பற்றியதாக அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு வகையான நோக்கத்தை மையமாகக் கொண்டிருக்கின்றன. நோக்கம் இல்லாத கதைகளே இல்லை எனலாம். மொத்தத்தில் கதைகள் மக்களை நல்வழிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு விளங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கதைகளின் பயன்கள்

நாட்டுப்புறக்கதைகள் சொல்லப்படுவனவேயன்றி எழுதப்படுவன அல்ல. அவ்வாறு சொல்லப்படுவதன் உள்நோக்கம் அடிப்படை அறிவிலிருந்து பட்டறிவை உணர்த்தி நூலறிவான செவியறிவைப் புலப்படுத்துதற்காகும். நற்கருத்துக்களுக்கு முதலிடம் கொடுத்து, அவற்றின் காரணகாரியத் தொடர்புகளை விளக்கி, அவற்றின் பயன்களை எடுத்துரைக்கக் கதைகள் பயன்படுகின்றன.

கதைகளின் நற்பயன்களாக நற்கருத்துக்கள் பரிமாற்றப்படுதல், வாழ்வியல், கொள்கை, விளக்கம், இறந்த காலச் சம்பவங்களுக்கு உயிரூட்டல், பண்டைய மக்களின் வரலாற்றுக்குறிப்புக்களைப் புலப்படுத்தல், முன்னோர்களின்

வரலாறு கூறுதல், அரசியல் வரலாறு பற்றிய செய்திகளைப் புலப்படுத்தல், குடும்ப வரலாறு கூறுதல், மனமகிழ்ச்சி மற்றும் பொழுதுபோக்கு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அறிவுறுத்தல், தொன்மையான பண்பாட்டுக் குறிப்புகளை வெளிக்கொணர்தல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இத்தகைய பயன்கள் கதைகளைச் சொல்வதன் மூலமும், அவற்றைக் கேட்பதன் மூலமும் மக்களிடையே பரிமாற்றம் செய்யப்படுகின்றன. கருத்து விளக்கமாகவும், சம்பவ விளக்கமாகவும் கதைகளின் பயன்கள் மக்களைச் சென்றடைகின்றன.

## வீரர்களும் கதைகளும்

உற்பத்திக் கருவிகளைக் கண்டுபிடித்து உற்பத்தியைப் பெருக்கிய போது வேலைப் பிரிவினை தோன்றியது. வேலை பிரிவினை ஆணுக்குத் தலைமை கொடுப்பதாக ஆணாதிக்கச் சமூக அமைப்பிற்கு அடிகோலுவதாக அமைந்தது. இனக்குழுத் தலைவனைப் பற்றியும் அவன் ஆற்றிய வீரச் செயல்களைப் பற்றியும் பெருமை பேசும் கதைகள் எழுந்தன. இக்கதைத் தலைவர்கள் உண்மையில் வாழ்ந்தவர்கள் என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்பட்டு வீரர்களும் தலைவர்களும் புரிந்த வீரச்செயல் நிகழ்ச்சிகள் சமயச் சடங்குகளாக மாறின. அவர்கள் வாழ்ந்த இடங்கள் புண்ணியத் தலங்களாயின. உற்பத்திச் சக்திகள் மென்மேலும் வளர்ச்சியடைந்து தாயுரிமைத் தந்தையுரிமைப் போராட்டங்கள் நடைபெற்றுத் தனிச் சொத்துடமை ஆணாதிக்கத்திற்கு வந்தது. "உலகப் படைப்பைப் பற்றி எழுந்த கதைகள் கூட உலகப்படைப்பாளியை ஆண் எனக் கூறுகின்றன. கதையோடு தொடர்புடையவர்கள் நேரடியாகக் கண்டவர்கள், தொடர்புடையவர்களோடு கூறுவதாக அமைந்தவையாகும்".[16]

"வீரக்கதைகள் வளர்ச்சி பெற்றுக் காப்பியங்களாகின்றன. ஒரு வீரனின் கதையை முழுமையாகக் கூறும்போது தொன்மக்கூறுகள், பண்பாட்டு

நிலைகள் சேர்க்கப்பட்டு விரிவடைகிறது. இவ்வாறு வீரக் கதைகள் காப்பியமாகிறபோது உண்மையான வரலாற்றுத் தொடர்பை இழப்பதில்லை".[17]

## விலங்குகளும் கதைகளும்

நாட்டுப்புறக்கதைகளில் விலங்குகளுக்கு முதன்மை அளிக்கப் பட்டுள்ளது. இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனிதர்கள் விலங்குகளை வேறுபடுத்திப் பார்க்காமல் தங்கள் வாழ்வோடு இணைத்தே கண்டனர். விலங்குகள் மனிதர்களைப் போல எல்லாவித உணர்வுகளோடும் வாழ்வதாக எண்ணினர். மனித வாழ்வில் நிகழும் எல்லாச் செயல்களும் விலங்குகளின் வாழ்க்கையிலும் நிகழ்வதாக நம்பினர். விலங்குகளிடத்திலிருந்து மனிதன் நிறையக் கற்றுக் கொண்டான். தொடக்ககாலங்களில் விலங்குகளைப் பற்றி வழங்கிய கதைகள் வெறும் கதை சொல்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. பிறகு அறம் போதிக்கும் நிலைக்கு வளர்ச்சியடைந்தன. "பகுத்தறிவற்ற மிருகங்களோ, பொருட்களோ அறத்தைப் போதிக்கும் நோக்கத்தோடு மனிதருடைய பழக்கவழக்கங்களை அனுசரித்துப் பேசவும் நடிக்கவும் செய்வதாகப் புனையப்படும் கதையே நீதிக்கதை என்று ஜான்சன் கூறுகிறார்"[18].

மனிதர்களுக்குள்ள நல்ல குணங்களையும், தீய குணங்களையும் விலங்குகளுக்கேற்றி அதனால் ஏற்படும் விளைவுகளைக் கதைகளாக்குகின்றனர். அன்பு, அறம், நட்பு, தியாகம், தவம், விட்டுக்கொடுத்தல், ஈகை போன்ற நற்குணங்களையும் பகுத்தறிவற்ற விலங்குகள் கொண்டுள்ளதாகக் காட்டிப் பகுத்தறிவுள்ள மனிதர்கட்கு உணர்த்துவதாக இக்கதைகள் எழுந்துள்ளன. வேதங்களிலும், பிராமணங்களிலும், உபநிடதங்களிலும், மகாபாரதம், இராமாயணம், போன்ற புராண நூல்களிலும் விலங்குகளையோ பறவைகளையோ கதாபாத்திரங்களாக உருவகப்படுத்தி நீதி கூறும் கதைகளைக் காண முடிகிறது. போலச் செய்தலாக வாழ்க்கை நிகழ்ச்சிகளை வடிவமைத்துக் கொண்ட மனிதன்

விலங்குகளும் பறவைகளும் தனக்குக் கற்றுக் கொடுப்பதாகக் கதைகளைப் படைத்துக் கொண்டான்.

உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியும் பொருள் உற்பத்தி மேம்பாடும், பண்டமாற்று முறையும் மனித சிந்தனையை வளர்த்தன. இயற்கையின் பெரு விளைவுகளைக் கண்டு பயந்த மனிதன் இயற்கையைப் புரிந்து கொள்ள முயற்சி செய்தான். இயற்கையைப் பற்றிய மனிதனின் எண்ணங்களும், அச்சமும், தெளிவும் சடங்குகளாக வளர்ச்சியடைந்தன. சடங்குகளைப் பற்றியும் சடங்குகளோடு இணைந்தும் வழங்கிய பேச்சு மந்திர மொழியாகக் கருதப்பட்டது. மக்களுக்கு ஏற்படும் துன்பங்களிலிருந்து சடங்குகளும், மந்திரங்களும் காப்பாற்றும் என்ற நம்பிக்கை மக்களிடையே மிக ஆழமாகப் பதிந்தது. இந்த நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்த கற்பனைகளே கட்டுக் கதைகளாயின. இயற்கையில் உள்ள அனைத்துப் பொருட்களுக்கும் மிகப் பெரிய சக்திகள் இருப்பதாக நம்பிய மனிதன் அந்தச் சக்திகளே துன்பங்களுக்குக் காரணம் என்றெண்ணி, அவற்றிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும், அச்சத்தைப் போக்கிக் கொள்ளவும் கதைகளைப் படைத்தான்.

தொடக்ககாலக் கதைகள் பஞ்சபூதங்களைப் பற்றிய கற்பனை விளக்கங்களாக அமைந்தன. உலகம் எவ்வாறு தோன்றியது என்ற வினாவிற்கு மனிதர்கள் தங்களின் அனுபவங்கள் மூலமாகக் கண்ட உண்மைகளைக் கொண்டு பதில்களை உருவாக்கினர். அவை கதைகளாக வளர்ச்சியடைந்தன. தாங்கள் அனுபவித்த விளைவுகளைக் கொண்டு ஏற்படுத்திய கற்பனைகள் கதைகளாய் எழுந்தன. மனித வாழ்விற்கு நன்மை ஏற்பட வேண்டும் என்ற நோக்கில் பயபக்தியோடு இக்கதைகள் எழுந்தன.

உழைப்புப் பிரிவினை தோன்றித் தாய்வழிச் சமூகம் தந்தைவழிச் சமூகமாக மாறிய போது வீரர்களையும் தலைவர்களையும் கதை மாந்தர்களாகக்

கொண்டு கதைகள் எழுந்தன. இறந்த வீரர்களின் ஆவிகள் வாழ்வதாக நம்பியதால் ஆவிகளைப் பற்றியும் கதைகள் கூறப்பட்டன. கதைகளுக்கு தெய்வ மதிப்பு கொடுக்கப்பட்டு நீதி போதிக்கும் நிலை ஏற்பட்டது. இக்கதைகள் உண்மையின் அடிப்படையில் எழுந்தவையாக மக்கள் நம்பினர்.

மனித வாழ்வுக்குத் தேவையான நீதிகளைச் சொல்லும் பயன் நிலைக்கும் கதைகள் வளர்ச்சியடைந்தன. இயற்கைப் பொருட்களும் விலங்குகளும் பேசுவதாகக் கதைகள் எழுந்தன. சமுதாயம் வளரவளரக் கருத்து நிலையிலும் வளர்ச்சி ஏற்பட்டது. பல்வேறு காலமாறுதல்களையும் ஏற்றுக்கொண்டு சமுதாயத்தின் எல்லாச் செய்திகளையும் விளக்கும் விதத்தில் நாட்டுப்புறக் கதைகள் பெருகின.

"நாட்டுப்புறக்கதைகளின் கடைசி மூலம் மனித சமூகம்தான். மிகத் தொடக்க காலம் முதல் மனித சமூகத்தின் வேராக இருக்கும் உணர்ச்சிகள் நாட்டுப்புறக் கதைகளில் வெளிப்படுத்தப்படுகின்றன. மனிதனின் ஒவ்வொரு நாளின் நடைமுறை வாழ்க்கையைப் பற்றிய முழுவடிவத்தையும் நாட்டுப்புறக் கதைகள் பிரதிபலிக்கின்றன. பெற்றோரின் அன்பு, குடும்ப மகிழ்ச்சி, சிறுவர்களின் வீரசாகச் செயல்கள், அறியாத செய்திகள் பற்றிய பயம், ஈடுபாடு மற்றும் பல்வேறு செய்திகளைப் பற்றியும் நாட்டுப்புறக்கதைகள் கூறுகின்றன"[19] என்று பி.சி. ராய்சௌதிரி கூறுகிறார். இவரின் கூற்றுக்கேற்ப மனிதனை மையமாகக் கொண்டு மனித சமூகத்தின் பலநிலைகளையும் விளக்கும் விதத்தில் ஏராளமான நாட்டுப்புறக்கதைகள் தோன்றியுள்ளன.

"இக்கதைகள் கூட சமூக நிலைமைகளால் கட்டுப்படுத்தப்பட்டு கதைகள் எழுந்த சமூக நிலைகளைப் பிரதிபலித்தன. எனவே கற்பனைக் கூறுகளை அகற்றிவிட்டுப் பார்த்தால் உண்மையின் கரு தெரியும்"[20] என்று நா. வானமாமலை குறிப்பிடுகின்றார். மனிதர்களின் அனைத்து வாழ்வியல்

அனுபவங்களினின்றும் எழுந்த இக்கதைகள் வாய்மொழியாகப் பரவி மக்களிடையே இன்றும் நின்று நிலவுகின்றன. மனித வாழ்வின் எல்லா நிலைகளையும் விளக்கும் வாழ்வியல் வெளிப்பாடுகளாகப் பண்பாட்டைப் பறைசாற்றும் பாமரர் இலக்கியமாக நாட்டுப்புறக் கதைகள் செழித்து வளர்ந்துள்ளன.

## இந்தியாவில் கதைகள்

இந்தியாவில் கதை கூறும் மரபு சிறப்பாக வளர்ந்தமையால் அதிக அளவில் கதைகள் தோன்றின. இந்தியா, கிரேக்க நாட்டைப் போன்று நீதிக்கதைகளுக்குப் புகழ்பெற்ற நாடுகளும். இந்தியாவில் தோன்றிய பஞ்சதந்திரக் கதைகளும், அதன் வழிவந்த கதைகளும் உலகப் புகழ்பெற்றவை. உலகத்துச் சிறுகதை வளர்ச்சிக்குப் பஞ்சதந்திரம் மூலமாகும். புத்தரின் பிறப்பை உணர்த்தும் புத்த சாதகக்கதைகள் இந்தியாவின் செழுமையான கதை வளத்துக்கும் சான்றாகும். பல்வேறு மொழிகள் பேசப்படும் இந்தியாவில் எல்லா மொழிகளிலும் நாட்டுப்புறக்கதைகள் பெருகியுள்ளன. வெவ்வேறு மொழிகளில் வழங்கப்பட்டாலும் உள்ளடக்க நிலையில் ஒற்றுமையுடைய கதைகளையும் காண முடிகிறது. இவை நம் நாட்டில் வழங்கும் கதைக்கு மட்டுமல்ல உலக நாடுகளில் வழங்கும் அனைத்துக் கதைகளுக்கும் பொருந்தும். இதை தே. லூர்து,

"உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வரும் மக்களிடையில் கதைகள் வாய்மொழி வழக்கிலுள்ளன. இக்கதைகள் பல ஒப்புமைகளுடன் காணப்படுகின்றன. [illegible] இக்கதைகளிடையே முழுமையான ஒப்புமை காணப்படாவிட்டாலும் சில கூறுகளில் ஒப்புமைகள் காணப்படுகின்றன. எத்துவாளி (Trickster Tales) என்று அழைக்கப்படும் கதைகள் தமிழ்நாட்டிலும், மலையாளத்திலும், காடர்களிடையிலும், ஆப்பிரிக்காவிலும், அமெரிக்காவிலும் காணப்படுகின்றன. உலகெங்கும் உள்ள மக்கள் குழுவினரின்

மரபுவழிப் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் இந்தக் கதைகள் சொல்லப்படுகின்றன. தொல்பழங்குடியினரிடமும் விவசாயிகளிடமும் நகரங்களில் வாழ்வோரிடமும் இக்கதைகள் காணப்படுகின்றன".[21]

## தமிழில் கதைகள்

தமிழில் தோன்றியுள்ள கதைகள் கணக்கிலடங்காதவையாகும். நாட்டுப்புறக்கதைகளுள் மிகவும் பழமையானதாகக் கீரிப்பிள்ளையும் பார்ப்பனியும் என்ற கதை சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது. இக்கதை முன்பே வழக்கில் இருந்திருக்க வேண்டும். தமிழில் வழங்கி வரும் பழமொழிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதையினை உள்ளடக்கிக் கொண்டுள்ளன. சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள் ஆகிய இலக்கிய நூல்களில் ஏராளமான நாட்டுப்புறக் கதைகள் எடுத்தாளப்பட்டுள்ளன.

தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் 'பொருளொடு புணராப் பொய்மொழியானும், பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்' (தொல்.செய்.173) என்று இருவகைக் கதைகளைப் பற்றிக் கூறுகிறது. இந்த நூற்பாவிற்கு உரையெழுதிய பேராசிரியர் யானையும் குருவியும் தம்முள் நட்பு கொண்டு இன்ன இடத்திற்குப் போய் இன்னவாறு செய்தன என்று ஒருவன் புனைந்துரைக்கும் வகையெல்லாம் இதன்பால் அடங்கின என்று கூறுகிறார். நச்சினார்க்கினியரும், அவை, ஒரு யானையும் குதிரையும் தம்முள் நட்பாடி இன்னுயிர் சென்று இன்னவாறு செய்தனவாய் ஒருவனுள்ளேயொருவன் கற்று வரலாற்று முறைமையின் வருகின்றன என்று குறிப்பிடுகிறார்.

"தொன்மைதானே உரையொடு புணர்ந்த பழமை மேற்றே"

(தொல்.பொருள்.540).

என்ற தொல்காப்பிய நூற்பாவும் பழங்கதைகளைக் குறித்தே எழுந்துள்ளது. தொன்மை என்பது வரைவிராய்ப் பழமையவாகிய கதைப் பொருளாகச் சொல்லப்படுவது. பண்டுதொட்டே மக்களின் சிந்தனையில் வளர்ந்து வந்த புராண மரபுச்செய்திகளைக் கூறும் கதைகளைத் தொன்மம் (myth) எனக் குறிப்பர். தொல்காப்பியர் எண்வகை வனப்புகளுள் ஒன்றாக இதனைக் குறிப்பிடுகின்றனர். எனவே தொல்காப்பியர் காலத்துக்கு முன்பிருந்தே தமிழ்மொழியில் நாட்டுப்புறக் கதைகள் பெருகியிருந்தமையை அறியலாம்.

## அடிக்குறிப்புகள்

1. ஜார்ஜ் தாம்சன், மனித சமூகசாரம் (கேசன்கோ. மொ. பெ.) ப.36.
2. கார்த்தி, (மொ.பெ) சமுதாய வரலாற்றுச் சுருக்கம் –I, ப.20.
3. நா. வானமாமலை, பழங்கதைகளும், பழமொழிகளும், ப.80.
4. சோ. நடராஜன், ஹிதோபதேசக் கதைகள், முன்னுரை (பதிப்பு கிடைக்கவில்லை).
5. Antrowlang, Ritual and Religion, p.162
6. நா. வானமாமலை, மேலது, பக்.86–82.
7. நா. வானாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், ப.100.
8. Harold Brunvand, The Study of American Literature, p.4.
9. களஞ்சியம், அறிவியல் தொழில்நுட்பக் காலாண்டு இதழ் –3, தொகுப்பு–1, ப.9.
10. Harry M. Johnson, Sociology - A Systamatic Introduction, p.155.
11. நா. வானாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், ப.100.
12. திசு. பாலசுப்பிரமணியன், (மேற்கோள்) வீ. அய்யனார், பள்ளர்குலச் சடங்குகள், எம்ஃபில் ஆய்வேடு, ப–41.
13. Harold Brunvand, The Study of American Literature, p.4.
14. ச.வே. சுப்பிரமணியன், தமிழில் விடுகதைகள், ப.3.
15. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.212.

16. M. Katharine Briggs, A Dictionary of British Folktale, introduction, p.48.

17. E.F. Brenda Beck, "The Three Twins", "The telling of South Indian Folk Epic".p.152.

18. ஜாண்சன், மேற்கோள்: நடராஜன், மேலது, நூல் முன்னுரை.

19. P.C. Roy Chuthury, Folk Tales of TamilNadu, Editor Introduction, p.30.

20. நா. வானமாமலை, மேலது, முன்னுரை, VIII.

21. தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், பக்கம் கிடைக்கவில்லை.